// அவசரம் // // தனிகவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 4726/அ2/2023 நாள் 10.06.2024

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – Special Task force - பள்ளிகளில் பரிவர்த்தனை செய்யப்படும் வங்கி கணக்குகளில் உள்ள Government / Own Fund , Remittance Account / Deaf Account ஆகிய விவரங்களை அரசு கணக்கு தலைப்பில் செலுத்தி / விவரங்கள் சமர்பிக்க தெரிவித்தல் – தொடர்பாக. |
| பார்வை | சென்னை-6, பள்ளிக்கல்வி இயக்கக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலக மின்னஞ்சல் நாள் 06.06.2024 |

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / அரசு உதவிபெறும் / நகரவை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பரிவர்த்தனை செய்யப்படும் இணைப்பில் காணும் வங்கி கணக்குகளில் உள்ள வட்டி தொகை மற்றும் தற்போதைய நிலவரப்படி உள்ள வட்டியுடன் சேர்த்து அரசுக் கணக்கு தலைப்பில் உரிய தொகையினை செலுத்துமாறும் அத்தொகையின் செலுத்துச்சீட்டு நகலினை உடன் 12.06.2024 மாலை 4 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. Google Sheet (1) ல் உள்ள Government / Own Fund உள்ள விவரங்களில் சிவப்பு நிறத்தில் உள்ள கலங்கள் மட்டும் Google Sheet ல் பூர்த்தி செய்து அதன் நகலினை ( தங்கள் பள்ளிக்குரிய) உடன் இவ்வலுவலகத்தில் அ2 பிரிவில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.
2. Deaf Account என உள்ள விவரங்களில் தொடர்ந்து பரிவர்த்தனை செய்யப்படாமல் உள்ள தொகையினை RBI வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்ட தொகையினை மீள சார்ந்த வங்கியின் மேலாளரை தொடர்பு கொண்டு (மாதிரி கடிதத்தில் உள்ளவாறு) தங்கள் சுய விவரங்கள் KYC Update செய்த பின் மேற்காண் தொகை மற்றும் அதற்குண்டான வட்டி தொகையுடன் மீள Deaf Account லிருந்து தங்கள் வங்கி கணக்கிற்கு கொண்டு வந்து கீழ்க்காணும் கணக்கு தலைப்பில் IFHRMS மூலம் E-Challan வாயிலாக தொகையினை அரசுக்கு மாற்றம் செய்த பின் அவ்வங்கி கணக்கினை முடக்கம் செய்து ( Account Closed) செய்து வங்கி மேலாளரின் சான்று பெற்று ஒப்படைக்கப்பட வேண்டும்.
3. Google Sheet (2) **Remittance Account** என உள்ள விவரங்களில் **Committed Remittance To STF** என உள்ள கலத்தில் உள்ள தொகையினை உடன் E-Challan மூலமாக அரசு கணக்கு தலைப்பில் செலுத்தி அதன் விவரத்தினை Google Sheet

ல் பதிவிட்டு அதன் நகலினை ( தங்கள் பள்ளிக்குரிய) உடன் இவ்வலுவலகத்தில் அ2 பிரிவில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் மூன்று படியான விவரங்களை காலதாமதத்திற்கு இடமளிக்கா வண்ணம் 12.06.2024 மாலை 4 மணிக்குள் தேதிக்குள் சமர்பிக்குமாறும் காலதாமதம் ஏற்படின் முழுபொறுப்பு சம்பந்தப்பட்ட தலைமைஆசிரியரையே சாரும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. வங்கி மாதிரி விண்ணப்பக் கடிதம்.
2. Google Sheet (1)
3. Google Sheet (2)
4. Deaf Account பள்ளிகளின் விவரம்.

// ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்.

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள்

அரசு / நகரவை / அரசு உதவிபெறும் உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்

வேலூர் மாவட்டம்.

**நகல்**

சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்கக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.